Registered as a Newspaper

பெண்மைக்குமெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி; 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.1/=

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ தை மீ 8 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 20 (21-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 47

# இந்தியாவினால் இப்போது எதுவுமே செய்ய முடியாது!

## ஸ்திரமற்ற இலங்கையுடன் எப்படிப் பேசுவது என்று கேட்கிறார் பிரதமர் ராஜீவ்

புதுடில்லி, ஜனவரி 21

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசிடம் இருந்து உறுதியான யோசனைகள் வராதவரை இந்திய அரசினால் ஒன்றுமே செய்யமுடியாது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

நேற்றுக் காலை புதுடில்லியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனை அறிவித்தார்.

2 மணித்தியாலங்கள் வரையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பஞ்சாப், மிஸோரம், அஸ்ஸாம், கூர்க்கலாந்து, சீனா, பாகிஸ்தான் பற்றி எல்லாம் பிரதமரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

### இலங்கை அக்கறை காட்டவில்லை

ஆனால் இலங்கை பற்றி ஒரே ஒரு கேள்வி மட்டுமே கேட்கப்பட்டது.

அக் கேள்விக்குப் பதிலளிக்கையில் பிரதமர் சொன்னதாவது:-

மோசமடைந்து வரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இலங்கை அரசு அக்கறை காட்டுவதாக இல்லை.

பிரச்சினைக்குத் தீர்வாக சமர்ப்பிக்கப்பட்ட தனது யோசனைகளையே பின்பற்ற முடியாத ஓர்

(4ஆம் பக்கம் பார்க்க)

**மின்னல் செய்தி**

## லொறிக்காரர் மீது பிழை சுமத்துகிறார் பிரிகேடியர் ஜெரி!

யாழ்ப்பாணம், ஜன. 21

ஒரு சில லொறிக்காரரின் நடத்தைகளினாலேயே பொதுமக்களுக்கு இவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்று வட பிராந்திய லொறிப் போக்குவரத்து சங்கப் பிரதிநிதிகள் பலாலி இராணுவமுகாம் பிரிகேடியர் ஜெரி டி. சில்வாவை சந்தித்த போது பிரிகேடியர் இவ்வாறு சொன்னார்.

வடபகுதி லொறிகளை பூரணமாக சோதனையிடுமாறு எமக்கு உத்தரவு கிடைத்தும் அவ்வளவு தூரம் நுணுக்கமாக நாம்சோதனையிடவில்லை.

எனினும் சில லொறிக்காரர்கள் எமது சிப்பாய்களுக்கு இலஞ்சம் கொடுத்து வருகிறார்கள்.

லொறிகளில் கொண்டு வரப்படும் பல பொருள்களுக்குள் எரிபொருளைக் கடத்தி வருகிறார்கள்.

இதன் காரணமாகவே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய அமைப்புகளுடன் கருத்து வேறுபாடு இல்லை

### தமிழ் ஈழ இராணுவம் அறிவிப்பு

யாழ்ப்பாணம் ஜன.21

தமிழ் ஈழ இராணுவத்துக்கும் ஏனைய விடுதலை அமைப்புக்களுக்கும் இடையே எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை.

தமிழ் ஈழ இராணுவத்தின் ஆணைச்சபை விடுத்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

ஏனைய விடுதலை அமைப்புக்களுக்கும் எமக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதாக சில விஷமிகள் பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

எமது விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்குடன் தான் இப்படி பிரசாரம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெளியேற முயன்ற சிப்பாய்கள் மீது கட்டுவனில் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஜன.21

பலாலி இராணுவ முகாமில் இருந்து கட்டுவன் பகுதியூடாக வெளியேற முயன்ற சிப்பாய்கள் மீது நேற்று விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

வைரவர் கோவில் பக்கமாக வந்த சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலினால் மீண்டும் முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

முகாமுக்குச் சென்ற சிப்பாய்கள் அங்கிருந்து ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிப்பிரயோகமும் மேற் கொண்டனர். (உ-10)

## ஆனையிறவு முகாமில்வைத்து லஞ்சம்வாங்கிய சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 21

லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படும் சிப்பாய் ஒருவர் ஆனையிறவு தடை முகாமில் வைத்து இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்

தடை முகாமில் சோதனைக்காக நிறுத்தப்பட்ட லொறி ஒன்றை சோதனையிடாமலேயே செல்ல அனுமதிப்பதற்காக ஒரு லொறிச் சாரதியிடம் இவர் 400 ரூபாவை லஞ்சமாக வாங்கினாராம்

அவ்வேளையில் அங்கு பொதுமக்கள் போல் சிவில் உடையில் நின்ற இரகசியப் பொலீஸார் அந்தச் சிப்பாயை கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது

கைதுசெய்யப்பட்டவர் உயர்மட்ட விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ-10)

### மண்டூர் படுகொலைகள்:

## 7 சடலங்கள் எங்கே?

மட்டக்களப்பு,ஜன 21

மண்டூரில் தேடுதல் வேட்டையின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த 12 குடிமக்களில் 7 பேரின் சடலங்களை படையினர் எடுத்துச் சென்றுவிட்டனர் என்று மட்டக்களப்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தேடுதலுக்குச் சென்ற அதிரடிப்படை பொலீஸார் முதலில் ஏழு பேரைச் சுட்டுக் கொண்டனர்.

பின்னர் 5 பேரைச் சுட்டனர். அவர்களின் சடலங்களே உறவினர்களால் பொறுப்பெடுக்கப்பட்டன. (உ-எ)

### லொறிப் போக்குவரத்துச் சிக்கல்:

## கிளிநொச்சி முகாம் அதிகாரிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன 21

ஆனையிறவு தடுப்பு முகாம்பகுதியைத் தாண்டிச் செல்லமுடியாது அப்பகுதியில் தரித்து நிற்கும் 250 க்கும் மேற்பட்ட லொறிகள் தொடர்பாக இன்று வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் கிளிநொச்சி இராணுவ முகாம் உயரதிகாரிகளை சந்தித்துப் பேசுவர்.

நேற்று பலாலி இராணுவ முகாம் உயரதிகாரிகளை சந்தித்த அவர்கள் இத்தலகய கெடுபிடியினால் குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

லொறிப் போக்குவரத்துக் கஷ்டங்களையும் எரிபொருள் விநியோகக் குறைபாடுகளையும் அவர்கள் எடுத்துக் கூறினர்

இதனையடுத்து பலாலி இராணுவ முகாம் பிரிகேடியர் ஜெரி டி. சில்வா

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜன 21

யாழ் குடாநாட்டுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

எரிபொருள் தடை காரணமாககுடா நாட்டு பஸ் சேவைகள் இரண்டு வாரகாலமாக ஸ்தம்பித நிலையில் இருந்தன.

எனினும்பொதுமக்கள் நலன் கருதி ஆறுபாதைகளில் மட்டுப்படுத்தப்பட்ட சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கொடிகாமம் - யாழ்ப்பாணம், பனை-யாழ்ப்பாணம், காங்கேசன்

(4ஆம் பக்கம் பார்க்க)

**முச்சந்தி முனி**



பார்த்தசாரதி வழியை வெங்கடேசனும் பின்பற்றி விட்டார் பின்னே ஓ வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்தானே அது தானுக்கும்!

## யாழ் தபால் அலுவலகம் வீரசிங்கம் மண்டபம் தீயிட்டு எரிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜனவரி, 21

யாழ். பெரிய தபாற் கந்தோர் கட்டடமும், பல மாடிகளைக் கொண்ட வீரசிங்க மண்டபமும் நேற்று தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

நேற்று மாலைவரை கப்டடங்களின் உள் பகுதி தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது.

யாழ்.கோட்டை இராணுவ முகாமில் உள்ள சிப்பாய்கள் மேற்படி கட்டடங்கள்வரை நகர்ந்து அவற்றை ஆக்கிரமித்து அங்கு நிலைகொள்ள ஆயத்தமாவதாகத் தெரியவந்ததைத் தொடர்ந்தே அவற்றுக்கு தீ வைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இராணுவம் அக் கட்டடங்களில் நிலை கொள்வதற்கு ஆரம்ப ஏற்பாடாக - ஆயுதங்கள், பொருள்கள் சகிதம் பெருந்தொகையான சிப்பாய்கள்யாழ் கோட்டை இராணுவ முகாமுக்கு கொண்டுவரப் பட்டதை யடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

எனினும் மேற்படி கட்டடங்களிற்குள் இருந்த அதிகமான தளபாடங்களும் தஸ்தாவேஜுக்களும் தீ வைக்கப்படுவதற்கு முன்னரே அகற்றப்பட்டு விட்டன.

அதன் பின்னர் தான் கட்டடங்களின் சுவர்கள் ஓரமாக டயர்கள், உமி மூடைகள் என்பன அடுக்கப்பட்டு தீ மூட்டிக் கொளுத்தப்பட்டது.

காலை பதினொரு மணி அளவில் மூண்ட இத் தீ நேற்று மாலை வரை எரிந்து கொண்டிருந்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய வெளியுறவுச் செயலாளர்

## வெங்கடேஸ்வரன் திடீர் இராஜினமா!

புதுடில்லி, ஜன. 21

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் நேற்று இராஜினமாச் செய்து விட்டார்.

வருடக் கடைசியில் பாகிஸ்தானுக்கு பிரதமர் காந்தி விஜயம் செய்வார் என்று இஸ்லாமபாத்தில் வைத்து திரு. வெங்கடேஸ்வரன் அறிவித்து இருந்தார்.

அது தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை அடுத்தே திரு. வெங்கடேஸ்வரனின் ராஜினமாவை பிரதமர் காந்தி கோரியிருந்தார் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கக் கூலிப் படைகள் இலங்கையில் அரசுப் படைகளுக்கு உதவுவதாக வாஷிங்டனில் திரு. வெங்கடேஸ்வரன் அமெரிக்க அதிகாரிகளிடம் கூறியிருந்தார் என்பதும் -

அது குறித்து இலங்கை பலத்த கண்டனம் தெரிவித்து இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட வெளியுறவு அதிகாரியான திரு. வெங்கடேஸ்வரன் சுமார் 35 ஆண்டுகள் இராஜதந்திர சேவையில் ஈடுபட்டு வந்தார்.

கடந்த ஆண்டு திரு.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராஜினமாக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட விதம்

புதுடில்லி, ஜன 21

நேற்று சர்வதேச செய்தியாளர்கள் மாநாட்டை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நடத்திக் கொண்டிருக்கும் போதே திரு வெங்கடேஸ்வரன் திரு. காந்தியின் மேசையில் தனது இராஜினமாக் கடிதத்தை வைத்தார்,

பி.பி.சி. நேற்று இரவு இப்படி அறிவித்தது.

'இந்த ஆண்டு முடிவில் பாகிஸ்தானுக்கு நீங்கள் விஜயம் செய்ய இருப்பதாக வெளியுறவுச் செயலாளர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் இஸ்லாமபாத்தில் வைத்து அறிவித்திருந்தாரே! அது பற்றிய கருத்து என்ன? -இப்படி ஒரு செய்தியாளர் பிரதமரைக் கேட்டார்.

பிரதமர் பதிலளிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

21 - 01 - 1987

புதன்கிழமை

சுபநேரம்.
5.05 முதல் 6.35 வரை
ராகுகாலம்.
12 35 முதல் 2 05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### காங்கேசன் பொறியியலாளரின் முயற்சியால்

## ஆஸ்பத்திரி 'லிப்ட்' மீண்டும் இயங்குகிறது!

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ் ஆஸ்பத்திரியில் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக இயங்காதிருந்த 'லிப்ட்' தற்போது இயங்கத் தொடங்கியுள்ளது.

காங்கேசன் துறை சீமெந்துக் கூட்டுத்தாபன பொறியியலாளர் இதுவிடயத்தில் கூடிய அக்கறை எடுத்து அதனைத் திருத்தி இயங்கச் செய்துள்ளனர்.

ஏற்கனவே பழுதடைந்த நிலையில் இருந்த 'லிப்ட்'டை இயங்கச் செய்வதற்கு நாம் எவ்வளவு முயற்சிசெய்தும் அது பயனளிக்கவில்லை என்றும்-

அதற்கு கொழும்பில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கிரமிக்கும் முயற்சியை முறியடிக்கவே தீ வைப்பு

### தளபதி கிட்டு கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ் நகரில் மீண்டும் ஒரு பெரிய தாக்குதலை நடத்தி கோட்டையில் இருந்து 50யார் தூரத்துக்கு அப்பால் உள்ள வீரசிங்கம் மண்டபத்தையும் பெரிய தபாற் கந்தோரையும் சிப்பாய்கள் ஆக்கிரமிக்க திட்டமிட்டிருந்தனர்.

இதன் காரணமாகவே நாம் மேற்படி இரண்டு கட்டடங்களுக்கும் தீ வைத்துக் கொளுத்தினோம்.

மேற்படி இரண்டு கட்டடங்களும் எதற்காக எரிக்கப்பட்டன என புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டுவிடம் எமது செய்தியாளர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து 10 யாருக்கு அப்பால் உள்ள தொலைத் தொடர்பு நிலையத்தைக் கைப்பற்றுவதற்கு ஸ்ரீலங்கா அரசு இரண்டு குண்டு வீச்சு விமானங்களையும் ஹெலிகொப்டர் ஒன்றையும் பயன் படுத்தியது.

இதன் பின்னர் தாம் கள் பெரியதொரு சாதனை செய்துவிட்டதாக அரச தொடர்புச் சாதனங்கள் மூலம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதேபோலவே மேற்படி இரண்டு கட்டடங்களையும் குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர் ஆகியவற்றைப் பயன்படுத்தி கைப்பற்ற ஸ்ரீ லங்கா சிப்பாய்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்

அதனை முறியடிக்குமுகமாகவே நாம் மேற்படி இரண்டு கட்டடங்களுக்கும் தீ வைத்தோம்.

கோட்டைக்கும் மேற்



படி இரண்டு கட்டடங்களுக்கும் இடையில் உள்ள தூரம் 50யாருக்

(4-ம் பக்கம் பார்க்க)

## காவலூரில் கடற்படைப் படகு கண்ணியில் சிக்கியது

யாழ்ப்பாணம்,ஜன.21

ஊர்காவற்றுறை கடற் பகுதியில் சென்று கொண்டிருந்த கடற்படையினரின் படகு ஒன்று விடுதலைப் புலிகள் வைத்திருந்த கடற் கண்ணியில் நேற்றுச் சிக்குண்டு சிதறியது.

இதனால்படகுமுற்றாகநிர் மூலமாக்கப் பட்டதுடன் படகில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை 5மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது

இச் சம்பவத்தின் பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரங்கள்**

### இடமாற்றம்

பாவனையாளர் களின் பாதுகாப்புக் கருதி பண்ணையிலுள்ள 2 ஆம் நம்பர் கோழிக்கடை ஆரியகுளம் சந்திக்கு மாற்றப் பட்டுள்ளதை வாடிக்கையாளருக்கு அறியத்தரு கிறோம்.

### வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 23 - 1 - 87 வெள்ளி பிரிவு I 6.15 a.m, பிரிவு II 5 00p m பிரிவு I வெள்ளி, செவ்வாய், வியாழன் 6 15 a.m பிரிவு II வெள்ளி, செவ்வாய் 5 00 p m

### காணவில்லை

வவுனியாவிற்கும் புளியங்குளத்திற்குமிடையில் மினி வானிலிருந்து எனது சூட்கேஸ் தவறி விட்டது. தயவுசெய்து ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன்.

எஸ். கந்தசாமி, ஸ்ரீதர் தியேட்டர், யாழ்ப்பாணம்.

ஆனையிறவு தடை முகாமில்

# லொறிப் போக்குவரத்தை கட்டுப்படுத்தாதீர்

## பிரிகேடியருக்கு அரச அதிபர் கடிதம்

யாழ்ப்பாணம் ஜன. 21

பிரயாணிகள்வாகனங்களையும், விறகு கொண்டு வரும் லொறிகளையும், குடாநாட்டு மக்களுக்கு தேவையான மரக்கறிகள் உணவுப் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றிவரும் லொறிகளை ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்காமல் தொடர்ந்து செல்ல அனுமதியுங்கள்.

இப்படி யாழ் அரச அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் பலாலி இராணுவ முகாமில் உள்ள பிரிகேடியர் ஜெரி சில்வாவிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடிதத்தினை வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் பிரிகேடியரிடம் கையளிப்பர்.

மேற்படி வாகனங்கள் அதிக நேரம் முகாமில் தாமதிப்பதன் காரணமாக பொது மக்கள் பல அசௌகரியங்களுக்கு உட்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டிருப்பதாக அரச அதிபர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (உ-10)

## 3 சிங்கள மீனவர்கள் தூத்துக்குடியில்

கொழும்பு, ஜன. 21

மாத்தறையைச் சேர்ந்த மூன்று சிங்கள மீனவர்கள் தென் இந்தியத் துறை முக நகரான தூத்துக்குடியில் கரை சேர்ந்தனர்.

அவர்கள் அங்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இம்மாதம் 3ஆம் திகதி கடலுக்குச் சென்ற இம் மீனவர்கள் 9ஆம் திகதி திசை மாறி தூத்துக்குடி சென்றடைந்தனர் (உ-ஐ-எ)

## மக்கள் முகம்

### அறவழி மறுமலர்ச்சிக் கழகம்

வேலணை, ஜன. 21

அறவழிப்போராட்டக் குழுவின் மகளிர் அணி அறவழி மகளிர் மறுமலர்ச்சிக் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது

புதிய நிர்வாக சபை வருமாறு:

தலைவர்:- திருமதி. விசாலாட்சி இராமலிங்கம் உபதலைவர்கள்:- திருமதி கார்த்திகேசு நிர்மலாதேவி, திருமதி முருகையா வள்ளியம்மை செயலாளர்:- திருமதி. செல்வஜோதி உஷா உபசெயலாளர்கள்:செல்வி. மாலிங்கம் சசிதேவி திருமதி காந்தன் சாந்தா பொருளாளர்:- செல்வி. தம்பிமுத்து இந்திராதேவி இணையமைப்பாளர்கள்:- செல்வி. தர்மினி வீரசிங்கம் செல்வி ராகினி கந்தையா

பதினொன்கு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ-167)

யாழ் பல்கலைக்கழக

## உயிரியல் தொழில்நுட்ப துறைக்கு ஒருசதமாவது அரசு ஒதுக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ் பல்கலைக் கழக உயிரியல் தொழில் நுட்பத்துறைக்கு அரசு ஒரு சதம்தானும் ஒதுக்கவில்லை.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட உயிரியல் இரசாயனப் பேராசிரியர் திரு. கே. பாலசுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில் நுட்பப் பயிற்சி நெறி வைபவ ரீதியாக நேற்று முன் தினம் திங்கட் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேராசிரியர் மேலும் பேசுகையில், இப்பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக வெளிநாடு சென்ற 77 பேரில் 3 பேர் மட்டுமே நாடு திரும்பியுள்ளனர்.

இங்கு உயிரியல் தொழில் நுட்பத் துறையில் இப்போது 25 பேர் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டுள்ள போதும் அரசாங்கம் இத்துறைக்கு ஒரு சதம் தானும் ஒதுக்காதது ஆச்சரியமானது என்றார்

புதிய பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்த துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில், பல்கலைக் கழகம் தன்னிறைவு பெறவேண்டுமாயின் மக்கள் பரந்து வாழும் பிரதேசங்களில் இயந்திரத் தொழில்களை விருத்தி செய்ய வேண்டும்.

இதைவிட்டு வெறுமனே பட்டதாரிகளை உருவாக்கும் பயிற்சிக் கூடமாக இருக்கக்கூடாது என்றார்.

இவ்வைபவம் மருத்துவ பீடத் தலைவர் என். சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. புல்லைநாயகம், சீமாசிக் இன்டஸ்றீஸ் தொழிலதிபர் திரு. ஆர். ஜே. குணரத்தினம், கலாநிதி விஜயமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (இ-5)

### பாரிய கிடங்கு வெட்டப்படுகிறது

யாழ் - மணிக் கூட்டு வீதியில் உள்ள மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் பாரிய கிடங்கு ஒன்று விடுதலைப் புலிகளால்வெட்டப்பட்டுள்ளது.

கோட்டை முகாமைச் சுற்றியுள்ள பல வீதிகளில் இவ்வாறு குழிகள் வெட்டப்பட்டிருப்பதுடன் வீதித் தடுப்புகளும் புலிகளினால் போடப்பட்டுள்ளன. (உ-10)

# தமிழ் எழுத்துத்துறையில் ஒரு வெற்றி

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

மானிப்பாய், ஜன. 21

நாடாளுமன்ற சடங்குகளையும், ஜனநாயக கோட்பாடுகளையும் ஒன்றிணைத்து சாதாரண மனிதர்கள் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் இலக்கிய ரசனையுடன் இந் நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். அரசியல் சார்பான விடயங்களை தொகுத்து சாதாரண மனிதனுக்காக எழுதப்பட்ட இந் நூல் தமிழ் எழுத்துத் துறையில் ஒரு வெற்றி ஆகும்.

செல்லப்பா நடராசாவின் "எனது நோக்கில் இலங்கை பாராளுமன்றம்" என்ற நூல் அறிமுகவிழாவில் போசுகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினர்.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற இவ்விழாவில் திரு வித்தியானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவர் திரு, எஸ். திருநாவுக்கரசு விழாவுக்குத் தலைமை வகித்தார்

துணை வேந்தர் வித்தியானந்தன் மேலும் பேசுகையில்:-

எழுத்தாளர்கள் தம் கருத்துக்களை சுருக்கக் கூறி விளங்கவைக்க வேண்டும்.

எவ்வளவு புகழ்பெற்ற எழுத்தாளனாயினும் அவனது எழுத்துக்கள் நீண்டுகொண்டு போனால் வாசிப்பவர் மனம் சலிப்படையும். இந் நூலாசிரியர் வாசிப்பவர் மனம் சலிப்படையா வண்ணம் தாம்கண்ட நாடாளுமன்ற அனுபவத்தை ஒழுங்காக மொழியாற்றலுடன் விளக்கியுள்ளார் என்றார்.

நூலின் அறிமுக உரையை நிகழ்த்திய இளம் சைவப் புலவர் திரு. எம். எஸ். ஸ்ரீதயாளன் நாடாளுமன்றம் என்றால் என்ன என்பதை சிறு கதைகள் மூலம் கூறுவது போல ஆசிரியர் தம் யதார்த்தக் கருத்துக்கள் மூலம் எடுத்துக் கூறியுள்ளார் என்றார்.

விழா ஆரம்பத்தில் சிவஸ்ரீ தா. ஹரிஹர சுப்பிரமணியக் குருக்கள் ஆசியுரை வழங்கினர்.

நெட்டிலிப்பாய் ஆலய பரிபாலன சபை பொருளாளர் திரு. பொ. இலங்கநாதபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு அ பஞ்சாட்சரம் (செயலாளர் பண்டிதமணி நூல் வெளியீட்டு சபை) திரு. பொ. குமாரசாமி (இளைப்பாறிய அதிபர்) திரு. சோ. பத்மநாதன் (பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர்) ஆகியோர் நூலைப் பற்றிய மதிப்புரைகள் வழங்கினர்.

நூலாசிரியர் திரு. செல்லப்பா நடராசா பதில் உரை நிகழ்த்தினர்.

நூலாசிரியருக்கு கலை இலக்கிய நண்பர்கள் சார்பில் தங்கப்பதக்கம், ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய சார்பில் வெள்ளித்தட்டு ஆகியன பரிசளிக்கப்பட்டன.

கலை நிகழ்ச்சியாக மிருதங்கமணி எம். என். செல்லத்துரையின் மாணவர்களின் மிருதங்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. (இ-90)

### பிரசைகள் குழு முயற்சி செய்யும்

முள்ளியவளை, ஜன. 21

முல்லைத்திவு அகதிகள் முகாமில் இருப்பவர்களின் உறவினர்கள் எவராவது பூசாமுகாமில் இருந்தால் அவர்களை அங்கிருந்து மீட்பதற்குரிய முயற்சிகளைச் செய்வதாகவும் அவர்கள் பற்றிய சகல விவரங்களுடனும் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி முல்லைத்தீவுப் பிரசைகள் குழுப் பேச்சாளர் ஒருவர் உதயன் நிருபரிடம் தெரிவித்தார். (இ-93)

## மர்ஹூம் மீரான் முஹிய்யதீன் ஆலிம் ஞாபகார்த்த நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன 21

மர்ஹூம் அல்ஹாஜ் மீரான் முஹிய்யதீன் ஆலிம் அவர்களின் இரண்டாவது ஆண்டு ஞாபகார்த்த சமய நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்தில் பெரிய முஹிய்யதின் பள்ளியிலும், சின்ன முஹிய்யதீன் பள்ளியிலும் இடம் பெற்றன.

இவ்வைபவங்களில் அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளருமான அல்ஹாஜ் மௌலவி, கே எம். எச். காலிதீன் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

அன்னாரின் பணிகள் பற்றி யாழ் மஸ்ரஉத்தீன் வித்தியாலய அதிபர் ஜனாப் எம். விஹாபுத்தீன், ஜனாப் நூர் முஹம்மது, மௌலவி எஸ். சதக்கத்துல்லாஹ், மௌலவி, எஸ். எச். கலீலூர் ரஹ்மான் யாழ் மாவட்ட உலமாசபையின் செயலாளர் மௌலவி. ஏ.எம். அப்துல் அஸீஸ் ஆகியோர் உரைகள் நிகழ்த்தியதுடன் பிரார்த்தனைகளையும் செய்தனர்.

அன்னார் பெயரில் யாஸீன் ஓதி தமாம் வைபவமும் இடம் பெற்றது.

மர்ஹூம் அல்ஹாஜ் மீரான் முஹிய்யதீன் ஆலிம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிறந்த இஸ்லாமிய சமயப் பெரியாராவார்.

அவர் யாழ் மாவட்ட ஜெம்மியதுல் உலமா சபையின் தலைவராகவும், யாழ் மாவட்ட கதீப் மார்கள் சம்மேளனத்தின் தலைவராகவும் பணி புரிந்தவர். (இ)


புகை பட அச்சுப்பிரதி (Photostat Services) இயந்திரச் சேவையை

**யாழ் பல்கலைக்கழகத்தில் வழங்குதல்**

யாழ் பல்கலைக்கழகத்தில் போட்டோப் பிரதி இயந்திரச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகிறது.

தெரிவு செய்யப்படுவோர் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒதுக்கித்தரப்படும் இடத்தில் பின்வரும் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

1 கடன் அடிப்படையில் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஆவணங்களைப் போட்டோப் பிரதி எடுத்தல்.
2 மாணவர்களுக்கு உடன் காசு அடிப்படையில்
3 யாழ் பல்கலைக்ககழக ஊழியர்களுக்கு உடன் காசு அடிப்படையில்

வெவ்வேறு அளவுகளிலான போட்டோப் பிரதிகளுக்கான அலகு விலையையும் பல்கலைக் கழகத்தால் ஒதுக்கித் தரப்படும் இடத்துக்கு வழங்கக்கூடிய மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு "நிதியாளர்" யாழ் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1987-02-02ந் திகதி 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும். கூறு விலைக் கடித இடது பக்க மேல் மூலையில் "போட்டோப் பிரதிகளுக்கான கூறு விலைக் கடிதம்" எனக் குறிப்பிடுக.

பதிவாளர்


## கதிரவெளியில் சிப்பாய் பலி!

### புலிகள் இருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம் ஜன 21

மூதூர் கதிரவெளி என்னும் இடத்தில் சுற்றி வளைத்த இராணுவச் சிப்பாய்களை எதிர்த்து இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தீரமுடன் எதிர்த்துப் போராடினர்

புலிகளின் கிரனேட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர் 3 சிப்பாய்களுக்கு சிறு காயம் ஏற்பட்டன.

எனினும் அந்த இரண்டுபுலிகளும் அம்மோதலில் உயிரிழந்தனர்.

கடந்த சனிக்கிழமை இரண்டு புலிகளும் தனியாக நடந்து வந்த சமயமே இச் சுற்றி வளைப்பு இடம் பெற்றது.

உயிரிழந்த புலிகளான லெப்டினட் இந்திரன், ரஜனி ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளது. (உ-எ)

### வெண்திரையில்

கரவெட்டி, ஜன. 21

நெல்லியடி தியேட்டர்களில் சுமார் இரண்டு வருடங்களாக காட்டப்பட்டு வந்த மினி சினிமா படங்களுக்குப் பதிலாக வெண்திரையில் படங்கள் திரையிடப்படுகின்றன. (இ-70)


ON SALE

New

Class Work Book

FOR

ENGLISH

7

YEAR SEVEN

Based on "ENGLISH EVERY DAY"

Publishers:

Gnanachurabi Book Company

217, Power House Road, JAFFNA.



A/L 89 Aug.

ஆரம்பம்:

24-1-1987 சனிக்கிழமை

(SAT. & SUN.)

PURE / APPLIED MATHS — 11.30-1 30 by MR. NALLIAH

BOTANY — 12.30-1 30 by MR. KUGATHARAN

ZOOLOGY — 1.30-2.30 by MR. NAGANATHAN

PHYSICS — 2,30-3.30 by MR. VARNAM

CHEMISTRY — 3 30-4.30 by MR. THILLAINATHAN

New Master Institute

B. M. C. LANE, JAFFNA.


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## இசைக்கலையைப் போற்றி வளர்ப்பது தமிழர் கடமை

யாழ்ப்பாணம், ஜன. 21

இறைவனையும் தம் வயபடுத்தும் தன்மை பெற்றது இசைக்கலை ஆகும். இராவணன் சாமகீதம் பாடி கைலையில் மீட்சிபெற்றான். அத்துடன் இசைக்கலை நம் வாழ்க்கையைத்தூய்மையாக்கி மன ஒருமைப்பாட்டைக் கொடுத்து சமூகத்தை நல்வழியில் செலுத்தும் சக்திவாய்ந்தது இக்கலையைப் போற்றி வளர்க்கவேண்டியது தமிழ்மக்கள் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் 35வது ஆண்டுப்பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு க. தர்மலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: யாழ் ரஸிக ரஞ்சனசபா 1952 தொடக்கம் பல்லாண்டு காலமாக இசைக்கலைத் தொண்டில் ஈடுபட்டு வருகிறது.

சங்கீதப்பாடசாலையையும் நிறுவி பல சேவைகளைச்செய்து வருகிறது.

மேலும் இதனை வளர்க்க தமிழ்மக்கள் உதவ வேண்டும இப்படி அவர் கூறினார்,

காரியதரிசி திரு. சி. சிவரத்தினம் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசினர்.

பண்டைய தமிழ் அரசர்கள் ஆண்ட காலத்தில் இயல், இசை நாடகக்கலை விற்பன்னர்கள் ஆஸ்தான வித்துவான்களாக இருந்து வந்தார்கள் என்றும் அந்நிலைமாறி கலைஞர்களும் தமிழும் [illegible] பெரியார்கள் [illegible] வளர்த்து வந்தார்களென்றும் கூறினர். (இ-5)

## மெதடிஸ்த கல்லூரி மாணவிகள் திறமை

பருத்தித்துறை, ஜன. 21

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலிருந்து வைத்திய பிரிவுக்கு 15 மாணவிகள் கல்வி கற்கக் கூடிய அதிசிறப்புத் தகைமைகளைப் பெற்றுள்ளனர்.

1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 40 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெறும் தகைமையைப் பெற்றுள்ளனர்.

பௌதீக விஞ்ஞானப் பிரிவில் ஒருமாணவி அதி கூடிய புள்ளியாக 321 பெற்றுள்ளார்.

பௌதீக விஞ்ஞான பிரிவில் 14மாணவிகளும், வர்த்தகபிரிவில் 18மாணவிகளும் கலைப்பிரிவில் 6 மாணவிகளும் பல்கலைக் கழக கல்வி பயில [illegible] பெற்றுள்ளனர். கல்லூரி அதிபர் திருமதி வி சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (உ-118)

### பஸ்முன் பாய்ந்தார்

முள்ளியவளை, ஜன 21

காலஞ்சென்ற சபாபதி (வயது 28) எனது உறவினர் முள்ளியவளைக்கு ஊடாக இ போ. ச சென்ற பொழுது காலஞ்சென்வர் வீதியின் அருகில் இருந்து திடீரென பஸ்ஸின் முன் பாய்ந்தார் பஸ் உடனே நிறுத்தப் பட்டதும் தலைசிதறிய நிலையில் உடலைப் பார்த்தேன்.

காலஞ்சென்றவரின் உறவினரான க. கந்தசாமி இவ்வாறு கூறினர்.

முல்லைத்திவுப்பொலீஸ் சார்ஜன்ட் ஜெயரத்தினம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

முல்லைத்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் கே, சண்முகநாதன் தனது சாட்சியத்தில் இடதுபக்க விலா எலும்பு முறிந்ததாலும் இரத்தப் பெருக்காலும் மரணம் சம்பவித்ததெனக்கூறினர்.

சாட்சிகளை நெறிப்படுத்திய முள்ளியவளை மரணவிசாரணை அதிகாரி திரு. கே. தியாகராசா தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினர்.(இ-93)


**வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை**

17, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

(யாழ்நகர் "உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையில்)

- இரவு பகல் சேவை
- வெளி நோயாளர் சேவை
- தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகள்
- வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள்
  - பொது வைத்தியத்துறை (General Medicine)
  - சத்திர சிகிச்சை (Surgical)
  - மகப்பேறு (Obstetrics, Gynaecology)
  - காது, மூக்கு, தொண்டை (E.N.T.)
  - சிறுவர்களுக்கான வைத்தியத்துறை (Paediatrics)
  - கண் சிகிச்சை (Eye)
  - சரும நோய் (Skin)
  - மனநோய் (Psychiatrics)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

சமுத்திரத்தைப் பாருங்கள்; அலையைப் பார்க்காதீர்கள். எறும்புக்கும் தேவதைக்கும் வித்தியாசம் பார்க்கக்கூடாது. ஒன்று உயர்வானது, மற்றது குறைவானது என்று சொல்லக் கூடாது. ஒவ்வொன்றும் இருக்கும் இடத்தில் பெரியது தான்.

—சுவாமி விவேகானந்தர்


உதயன்

இல,15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 21-01-1987 த.பெ இல 88


## அரச தமிழ் ஊழியர் மீது குதிரைவிட அரசு முயற்சி

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்கள் நால்வர் ஆனையிறவு தடைமுகாமில் வைத்து சிப்பாய்களினால் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது மிகவும் பாரதூரமான விடயமாகும். வடக்கில் பூரணமான இராணுவ ஆட்சி நடத்துவதற்கு எடுக்கப்படும் எத்தனங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டியது.

தமிழ்ப் பகுதிகளில் இராணுவ அட்டூழியம் பெரும் அளவில் பரவிவருகிறது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக நிலைமை நாளுக்கு நாள் மோசம் அடைந்து வருகிறது.

போராளிகளைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழரைக் கொன்று குவித்து வருகின்றன படைகள். கிழக்கில் தேடுதல், முற்றுகை என்ற பேரில் பல தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகிறார்கள்.

தமிழர்கள் எவராக இருந்தாலும் தங்கள் எதிரிகளே என்ற மனப்போக்குடன் படையினர் அவர்கள் மீது அடாவடித் தனங்களைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

போராளிகள் அப்பாவித் தமிழர்கள் என்பதைக் கடந்து, மக்கள் சேவை புரியும் அரசாங்க ஊழியர்களையும் சம்பந்தா சம்பந்தம் இன்றிப் பழிவாங்கியும் தாக்கியும் இம்சை செய்வதன் ஆரம்பமே ஆனையிறவுத் தாக்குதல் சம்பவமாகும்.

மக்கள் சேவை செய்வோருக்கு இவ்வாறு இம்சைகள், இன்னல்கள் கொடுப்பது அவர்களை அவற்றைச் செய்யவேண்டாம் என்று பயமுறுத்துவதற்கு ஒப்பாகும்.

பஸ் ஊழியர்களைத் தாக்கி, அவர்களைப் பயமுறுத்தி, போக்குவரத்துச் சேவையை ஸ்தம்பிக்கச் செய்வதை தமிழ் மக்கள் மீது விதிக்கப்படும் மற்றொரு பொருளாதாரத் தடையாகக் கொள்ளலாம்.

தீவிரவாதம் என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, எந்தவிதமான கொடிய சட்டத்தையும் அல்லது விதிமுறையையும் அல்லது தடையையும் கொண்டு வந்து தமிழர்களை நசுக்கலாம் என்பது அரசாங்கத்தின் எண்ணம். அதனையே அது இப்போதும் செய்து வருகிறது.

"இம்" என்றால் சிறைவாசம் "ஏன்"? என்றால் வனவாசம் என்ற சர்வாதிகாரச் சட்டத்தை விஞ்சக் கூடிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஒன்று இங்கு உண்டு. ஆயுதப் படையினர் என்ன அநியாயத்தைப் புரிந்தாலும் அதனை மூடிச் சமாளிப்பதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற அந்தப் போர்வையை பயன்படுத்தலாம். அந்தத் துணிவில் படையினர் தாம் நினைத்த ஆட்டம் ஆடுகின்றனர். அநியாயம் புரிகின்றனர்.

அரச ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கையில் அவர்களைத் தாக்கும் அளவிற்கு இராணுவ ஆக்கிரமிப்பும், அட்டூழியமும் கரை கடந்து விட்டன. இதற்குப் பின்னரும் தமிழ்ப் பகுதிகளில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுவதாக, மக்கள் நலன் பேணப்படுவதாக அரசாங்கம் பொய் கூற முடியுமா?

மக்கள் ஊழியரைத் துன்புறுத்திக் கொண்டு அவர்கள் மூலம் தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை நடத்தலாம் என அரசு எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

எம்மைத் துன்புறுத்தினாலும், துயம்சப் படுத்தினாலும் மாதச் சம்பளத்திற்காக நாம் பணி செய்வோம் என்ற நிலைப்பாட்டை தமிழ் அரச ஊழியர்கள் நிலைநிறுத்தி விடக் கூடாது.

ஆகவே ஆனையிறவில் பஸ் ஊழியர் தாக்கப்பட்டதைக் கண்டித்து அரச ஊழியர்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்க வேண்டும்.

இன்று பஸ் ஊழியர்களுக்கு நடந்தது நாளை ஏனைய தமிழ் அரச ஊழியருக்கும் ஏற்படலாம். எனவே அரச ஊழியர்களை இம்சைப்படுத்திக் கொண்டு அவர்கள் மூலம் சிவில் நிர்வாகத்தை இங்கு நடத்த அரசு எதிர்பார்க்க முடியாது என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்ல பகிஷ்கரிப்பு, வெளிநடப்புப் போன்ற போராட்டங்களில் அரச ஊழியர் ஈடுபடுவது அவசியம்.

தமிழ் அரச ஊழியர் எல்லோரும் ஒரே குரலில் எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் மட்டுமே இராணுவ அடாவடித்தனத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வரலாம். வெளி உலகுக்கும் காட்டலாம்.

வெளிநடப்பு, பகிஷ்கரிப்பு ஆகியவற்றால் மக்களுக்குச் சில இடைஞ்சல்கள் ஏற்படும் என்பது உண்மை. அதற்காக அநியாயத்தை வெளியே காட்ட, அதனை ஆட்சேபிக்க எதிர்க்க பின்நிற்கக் கூடாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்போது சோதனையான காலமாகும் கஷ்டத்தோடு, கஷ்டமாக சில நாட்களுக்கு அரச ஊழியர் போராட்டத்தின் விளைவுகளை அவர்கள் சகித்துக் கொள்வார்கள்.

தமிழ் அரச ஊழியரே ஒன்று படுங்கள். உங்கள் மீது அரசு குதிரைவிட இடம் கொடாதீர்கள்.

# ஜனநாயக முறை தோல்வியுற்றால்

# ஜனாதிபதி ஆட்சி உருவாகும்

## பஞ்சாப் நிலைவரம் பற்றி ராஜீவ்

புதுடில்லி, ஜனவரி 20

பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு காண சகல ஜனநாயக முறைகளுக்கும் இடமளிக்கப்படும். இவை தோல்வி அடைந்தாலே ஜனாதிபதி ஆட்சி கொண்டுவரப்படும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 2 மணித்தியாலங்கள் இச் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. சுமார் 45 நிமிடங்கள் பஞ்சாப் பிரச்சினை பற்றியே கேள்விகள் கேட்கப்பட்டன.

பஞ்சாப் உடன்பாட்டில் 11 அம்சங்கள் உள்ளன. எல்லா அம்சங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஆனால் அகாலிதள் கட்சி ஒவ்வொரு முறை புதிதாக பேச்சுக்களைத் தொடங்குவது போல் பேசுகிறது.

உடன்பாடு ஒன்று காணப்பட்டால் அதை நிறைவேற்றும் உறுதி இருக்க வேண்டும். இந்திய அரசுக்கு அந்த உறுதி இருக்கிறது. சொல்லுக்குச் சொல் பஞ்சாப் உடன்பாட்டை அமுல் நடத்த இந்தியா உறுதி பூண்டுள்ளது. மறு தரப்பில் அந்த உறுதி இல்லை.

ஜனநாயக வழிகளில் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்க அரசு உறுதி பூண்டுள்ளது. பர்னாலா அரசு இது சம்பந்தமான தீர்க்கமான வழிகளை மேற்கொள்ள வேண்டும். அவை தோற்றால்தான் ஜனாதிபதி ஆட்சி அமுல் நடத்தப்படும்.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (ஒ-எ)



### மக்கள் கட்சியின் அதிருப்தி

இஸ்லாமாபாத், ஜன. 20

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 'அவாக்' ரக விமானங்களை விற்பதையிட்டு பாகிஸ்தான் மக்கள் கட்சி அதிருப்தி தெரிவித்தது.

அங்கு மக்களின் ஜனநாயக குறிக்கோளை ஒடுக்கும் ராணுவ ஆட்சியை 'அவாக்' ரகபோர் விமானங்கள் வலுப்படுத்தும் என பாகிஸ்தான் மக்கள் கட்சி செயலாளர் எச்சரித்தார். (ஒ)

## இ. காங்கிரஸ் தலைவர் உட்பட 9 பேர் கொலை

சண்டிகார், ஜன. 20

பஞ்சாப் மாநில இந்திரா காங்கிரஸ் தலைவர் பால்பாண்டே உட்பட 9 பேர் நேற்று சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

திரு. பாண்டே முன்னாள் அமைச்சருமாவார்.

உயிரிழந்தவர்களில் திரு. பாண்டேயின் மெய்ப்பாதுகாவலரும் இரண்டு பாடசாலை ஆசிரியர்களும் அடங்குகின்றனர். (ஒ-எ)

## சிருங்கேரி சுவாமிக்கு இயந்திரத் துப்பாக்கியுடன் அதிகாரிகள் பாதுகாப்பு

பெங்களூர், ஜன. 20

சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகளை இயந்திரத் துப்பாக்கியுடனான பாதுகாப்பு அதிகாரிகள் காவல் புரிகின்றனர்.

கர்நாடகா அரசு இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சீக்கியத் தீவிரவாதிகளைத் தாக்கி சுவாமிகள் அண்மையில் பேசியிருந்தார்.

இதைத் தொடர்ந்து சீக்கிய தீவிரவாத அமைப்பு ஒன்று கர்நாடக பொலீஸ் ஆணையாளருக்கு எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தது.

சுவாமிகள் கொலை செய்யப்படுவார் என்று எச்சரிக்கைக் கடிதத்தில் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்தே சிருங்கேரி சுவாமிகளை இயந்திரத் துப்பாக்கியுடனான பாதுகாப்பு அதிகாரிகள் காவல் புரிந்து வருகின்றனர். (ஒ-எ)

### பஞ்சாப் தீவிரவாதி கைது

சண்டிகார், ஜன 20

பஞ்சாப்பில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் தீவிரவாதியான மகிந்தர்சிங் மாலா உட்பட 60 பேர் கைது செய்யப்பட்டனர்.

இத்திடீர் சோதனை நடவடிக்கையின் போது பெரும் தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன. (ஒ)

### வெளி உலகில்

### இஸ்ரவேலின் நஷ்டஈடு

பெய்ரூட், ஜன. 20

தெற்கு லெபனானில் இஸ்ரவேல் நடத்திய குண்டு வீச்சின் போது கொல்லப்பட்ட அயர்லாந்து வீரனின் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்கப்படும்.

இவ்வாறு இஸ்ரவேல் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அந்த வீரர் லெபனானில் உள்ள ஐ. நா. அமைதிகாக்கும் படையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். (ஒ)

### மிஸோராமில் தேர்தல்

புதுடில்லி, ஜன 20

மிஸோராம் மாநிலச் சட்டசபை தேர்தல்கள் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதய முதலமைச்சர் லால்டெங்கா சட்டசபை அங்கத்தவராக இல்லாததால் ஆறு மாத காலத்திற்கு மேலாக முதலமைச்சர் பதவியை வகிக்க முடியாது. பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியுடன் அவரது பதவிகாலம் முடிவடைவதையிட்டே பெப்ரவரி 16ஆம் திகதி தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### போர்க் கருவிகள் குவிப்பு

திரிபொலி, ஜன. 20

லிபியாவின் தென்பகுதியில் ஏராளமான நவீன போர்க்கருவிகள், டாங்கிகள், ஏவுகணைகள் ஆகியன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சாட் தேசத்திலிருந்து வரும் எந்தவிதமான தாக்குதல்களுக்கும் பதிலடி கொடுக்கவே இந்த நடவடிக்கை என தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### ஹுசென் பஸ்ரா விஜயம்

பக்தாத் ஜன. 20

ஈரான், ஈராக் போர் உக்கிரமடைந்து வரும் வேளையில் நேற்று பஸ்ரா நகருக்கு ஜனாதிபதி சதாம் ஹுசென் திடீர் விஜயம் மேற்கொண்டு ராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

பஸ்ரா நகர் பாதிப்படைந்தது என்ற செய்தியை முற்றாக நிராகரித்த ஹுசென் ஈராக் படைவீரர்களால் பலியாக்கப்பட்ட மூவாயிரம் ஈரான் சிப்பாய்களின் சடலங்களையும் பார்வையிட்டார். (ஒ)

### வில்லியம்ஸிற்கு ஏடு தொடக்கம்

லண்டன், ஜன. 20

இளவரசர் சார்ள்ஸ் டயானா தம்பதிகளின் மூத்த புதல்வனான நான்கு வயதுடைய வில்லியம்ஸ் பாடசாலை செல்ல ஆரம்பித்தார்.

சுமார் இரு மணி நேரம் பாடசாலையில் செலவிட்ட வில்லியம்ஸ் பாடசாலை வாழ்வு சுவாரசியமானது எனத் தமது தயாரிடம் தெரிவித்தாராம். (ஒ)

# பெங்களூரில் உருவான

## ஜே. ஆர் - ராஜீவ் உடன்பாடு விவரம்

கொழும்பு, ஜன. 21

பெங்களூர்ச் சந்திப்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஏற்பட்ட உடன்பாடு என்ன?

அந்த உடன்பாட்டின் விவரங்களை தற்சமயம் இலங்கை வந்திருக்கும் இந்தியப் பத்திரிகையாளர் திரு எஸ். வெங்கட்நாராயணன் வெளியிட்டிருக்கிறார்.

உடன்பாடு வருமாறு;

✶ வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு நியமிக்கப்படும் ஆளுநர்களுக்கு, இந்திய மாநில ஆளுநர்களுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

✶ போராளிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்.

✶ வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையே ஸ்தாபன ரீதியான இணைப்பு இருக்கும்.

✶ இரண்டு மாகாணங்களுக்கும் இடையே பல்கலைக் கழகம், மருத்துவக் கல்லூரிகள் ஆகிய நிர்வாகத்தில் 'கூட்டு முயற்சி' இருக்கும்.

✶ காவலில் வைக்கப்பட்டுள்ள சுமார் 4,000 தமிழருக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

✶ ஈழம் என்ற பேச்சுக்கோ, தீவைப் பிரிப்பதற்கோ இடமில்லை.

இச் சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் திட்டத்தை இரண்டு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனின் எதிர்ப்பால் மூன்று மாகாணத் திட்டம் கைவிடப்பட்டது.

இச்சந்திப்பினால் எதிர்பார்த்த விளைவுகள் திரு. பிரபாகரனின் நிலைப்பாட்டினால் ஏற்படவில்லை.

இச் சந்திப்பின்போது இலங்கை அரசுக்கும் தமிழருக்கும் இடையே ஏற்படும் உடன்பாட்டை அமுல்செய்யும் உத்தரவாதத்தை வழங்க இந்தியா முன்வந்தது.

திரு. ஜெயவர்த்தன கேட்டு இந்தியா முன்வந்ததா? அல்லது இந்தியா தானாகவே இந்த உத்தரவாதத்தைவழங்க முன்வந்ததா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இப்படி திரு. வெங்கட்நாராயண் நேற்று வெளியான 'த ஐலண்ட்' கொழும்பு ஆங்கில நாளிதழில் எழுதியிருக்கின்றார்.

திரு. வெங்கட்நாராயண் இப்போது யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். (அ-எ)

## சாதி, சமூக பேதமின்றி சமமாக எல்லோரும் மதிக்கப்படும் காலமிது

இன்றைய காலகட்டத்தில் சாதி, சமூக பேதமின்றி சமமாக எல்லோரும் மதிக்கப்படுவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.

மேற்கண்டவாறு பனை அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. க. நடராஜா தெரிவித்தார்.

வேலணை துறையூர் ஐயனார் வித்தியாசாலை மண்டபத்தில் திரு செ. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 12 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1977ஆம் ஆண்டு சீவல் தொழிலாளர்களின் நலன்கருதி பனை வெல்லத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

இதன் பின்னர் அரசினால் சீனி தாராளமாக இறக்குமதி செய்யப்பட்டமையினால் தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் பின்னர் வெளியில் ஊற்றப்படும் கள்ளில் இருந்து 'லோவைன்' என்னும் பானத்தை உருவாக்கி விற்பனைசெய்ததன்மூலம் பல லட்சம் ரூபாவை நிகர லாபவாக பெற்றுக்கொள்ள முடிந்தது.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் பொது முகாமையாளர் திரு இராசேந்திரன், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. [illegible] ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினார்கள். (உ-167)


## கல்விப் பகுதியை கல்முனையிலிருந்து மாற்ற ஆட்சேபம்

கொழும்பு ஜன 21

கல்முனையில் உள்ள கல்வித் திணைக்களத்தை அம்பாறை நகருக்குக் கொண்டு போகும் முயற்சி தமிழ் பேசும் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

சம்மாந்துறை எம். பி. ஜனாப் அப்துல் மஜீத், பொத்துவில் எம். பி. ஜனாப் உதுமா லெவ்வை ஆகியோர் நேற்று கல்வி அமைச்சுச் செயலாளர் வி. எல். விஜயமான்னவைச் சந்தித்து தங்களின் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

கல்முனையில் உள்ள கல்வித் திணைக்களத்தின் [illegible] நிர்வகிக்கப்படுகின்றன. (அ-எ)



### பொய்யாமொழி

குறள்:

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்.

பொருள்:

அவா அற்ற நிலைமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை. வேறு எங்கும் அதற்கு நிகரான ஒன்று இல்லை.

### செய்திக்கொத்து

#### பிரசைகள் குழு விஜயம்

முள்ளியவளை, ஜன. 21

தண்ணீரூற்று(?), மாந்தை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குச் சென்ற முல்லைத்தீவுப் பிரசைகள் குழு அங்குள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டது. (இ-93)

#### அகதிகளுக்கு வீடுகள்

சாவகச்சேரி, ஜன. 21

சர்வதேச சமாதான சேவை இயக்கம் இந்த ஆண்டில் ஐந்து வீடமைப்புத் திட்டங்களையும் அகதிகளுக்கான இருபது வீடுகளையும் கட்டிக் கொடுக்கும் பணிகளை மேற்கொள்ளும். அத்துடன் மகளிர்தினம், கல்வி யூட்டல் தினம் ஆகியவற்றையும் சிறந்த முறையில் அனுஷ்டிக்க இருக்கிறது.

இந்த ஆண்டுக்கான உத்தேச வேலைத்திட்டத்தில் மேலும் ஐந்து வேலை முகாம்கள், தொழிற் பயிற்சித் திட்டம், முதியோர் கல்வித்திட்டம், நூலகத் திட்டம், பத்திரிகை வெளியிடல் முதலானவற்றையும் செயல்படுத்த இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-31)

#### நூல் கொள்வனவு

சாவகச்சேரி, ஜன. 21

சாவகச்சேரி நகரசபை பொது நூலகம் கடந்த ஆண்டில் 30ஆயிரம்ரூபா பெறுமதியான நூல்களைக் கொள்வனவு செய்துள்ளது.

இந்நூல் நிலையத்திற்கு ஆசிய பவுண்டேஷன் ஸ்தாபனம் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (இ-31)

#### அரிசி விலை வீழ்ச்சி

கொடிகாமம், ஜன. 21

கொடிகாமம் பகுதியில் கிலோ. 9.75 சத மளவில் விற்பனையான நாட்டரிசி விலை தற்போது 8 50சதம் வரை இறங்கி உள்ளது. (இ-75)

#### கலைஞர் நாக-பரமசாமி பாராட்டுவிழா

பலாலி, ஜன. 21

கவிஞர் நாக-பரமசாமி அவர்களுக்கான பாராட்டுவிழா 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அரியாலை காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ள இப்பாராட்டு விழாவில் சிறப்புக் கவியரங்கு ஒன்றும் நடைபெறும்.

"புதியதோர் உலகம் செய்வோம்" என்ற தலைப்பில் இக்கவியரங்கு கவிஞர் சொக்கன் தலைமையில் நடைபெறும்.

கவிஞர்கள் நாக-பரமசாமி, நல்லை அமிழ்தன், மலையன்பன் முதலியோரும் கருத்தரங்கில் பங்கு கொள்கின்றனர் (இ-119)

#### நேரத்துக்குநேரம் மாறும் கட்டணம்

வல்வெட்டித்துறை, ஜன 21

வடமாகாணத்தில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி சில தனியார் போக்குவரத்து வாகனங்கள் மக்களிடையே நிமிடத்திற்கு நிமிடம் வித்தியாசமான கட்டணத்தை வசூலிப்பதால் போக்குவரவு செய்யும் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றார்கள். (இ-160)

#### மணவாள கோலவிழா

மானிப்பாய், ஜன. 21

உடுவில் குமரகோட்டம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த மணவாளக் கோலவிழா இன்று 21 ஆம் திகதி நடைபெறும்.

இன்று பகல் விநாயகப் பெருமானுக்கும், சண்முகப் பெருமானுக்கும் நவோத்தரசத சங்காபிஷேகம் நடைபெறும்.

சங்காபிஷேக கிரியைகளை உடுவில் கிரியாரத்தினம் பிரம்மஸ்ரீ ப. நித்தியானந்த நடராஜாக் குருக்கள் நிகழ்த்துவார்.

இன்றிரவு சண்முகப் பெருமானுக்கு திருக்கல்யாண விழா எடுக்கப்பட்டு பூந்தண்டிகையில் பெருமான் வீதிவலம் வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவலர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

உதயன்
21 - 01 - 1987 புதன்கிழமை

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
* ProcessingFree(நெகடிவ்செய்ய இலவசம்)
* வர்ண புகைபடச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவலர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

## வித்தாரம்

வந்திரா தம்பி மூரலி? என்ன, எந்தப் பக்கம் இருந்து வாறீர்? காலையில் பேசந்தைக்குப் போய் வந்திடுறாய் நல்ல முறை. என்ன இப்ப திண்ணைவேலிச் சந்தை தானே ரவுண் சந்தைக்குப் போறதை அனேகமாய் எல்லாரும் குறைச்சிட்டினம். திண்ணைவேலியில விலையும் குறைச்சல். காய்ஞ்சு வதங்காத நல்ல மரக்கறியும் வாங்கலாம்.

வெங்காயம் விலை எப்பிடி? கூடியிருக்கோ அல்லது குறைஞ்சிருக்கோ? சிலவேளை உடனடியா வித்தியாசம் தெரியாது. கேள்விப்பட்டிருப்பாய் ஆனையிறவுக்கு அங்காலை வெங்காய லொறியளை போக விடுகினம் இல்லையாம். பல லொறியள் திரும்பி வந்திட்டுது.

உந்த லொறித் தாமதம் விஷயத்தில எங்கடை ஆக்களிலையும் சில தவறுகள் இருக்குதெண்டு எனக்குக் கேள்வி. ஆனையிறவு பரியரிலை வாகனங்களைக் கொண்டு போய் சோதனைக்காக நிப்பாட்டுறதிலை வாகனக்காரர், நான் முந்தி நீ பிந்தி எண்டு சண்டை பிடிக்கிறது உண்டாம். அங்காலை நிப்பாட்டு, இஞ்சாலை நிப்பாட்டு எண்டும் பேசப்படுகிறவையாம். சிலபேர் 'சம்திங்' கொடுத்து முந்தி 'ரேண்' எடுக்கிறதும் உண்டாம். தனியார் பஸ் ஒண்டிலை பயணம் செய்த வாசகர் ஒருவர் இந்த விஷயங்களை என்ரை காதிலை போட்டார்.

அது நிச்சயம் நடக்கும் எண்டு நானும் நம்ப வேண்டி இருந்திது. எங்கடை ஆக்கள் இன்ரை சொந்தச் சுவாசமே அது தானே. தான் தான் முந்திக்கொண்டால் போதும், தன்ரை விஷயம் முடிஞ்சால் போதும் எண்ட சுயநலம் எங்களை மொத்தமாய் பின்னுக்குத் தள்ளி விடுறது உண்டு.

அதை விட உந்த வெங்காய விஷயத்திலை மட்டுமில்லை எங்கடை மற்ற விளைபொருள்களையும் சந்தைப்படுத்திறதுக்கு கொழும்புச் சந்தையை மட்டும் நம்பி இராமல் வேறு மாற்று வழியளை நாடவேணும்.

விளைபொருள்களை பழுதடையாமல் நீண்ட காலத்துக்கு பாதுகாத்து வைக்கக்கூடிய செமிப்புக் குதங்களைக் கட்ட வேணும்.

* * *

பாத்தியே ரெலிபோனுகளைப் பற்றி நேற்றுத் தானே சொன்னேன். நேற்றுப் பின்னேரத்தோடை கொழும்பு ரெலிபோன் தொடர்பு செத்துப் போச்சுது. அனுராதபுரத்திலை அல்லது கொழும்பிலை தான் பிழையாயிருக்க வேணும் எண்டு ஒரு கதை. இரண்டு ஒரு நாளைக்குப் பொறுத்திருந்து பாப்போமே.

* * *

என்ன இனப்பிரச்சினை விஷயத்திலை பந்து இப்ப இந்தியாவின்ரை பக்கம் எண்டு கிரிக்கெட்' சபைத் தலைவர் காமினி இரண்டு நாளைக்கு முன்னம் தானே சொன்னார்.


ராஜீவ் நேற்றுப் பந்தை இலங்கைப் பக்கத்துக்குள்ளை எறிஞ்சிட்டார் பாக்கயில்லையே.

இலங்கை இப்பக் கொஞ்ச நாளா குறிப்பாய் "சாக்கிறகு"ப் பிறகு அடிச்சு வந்த பாற்றிங்கை ஒரே ஒரு பந்தோடு தலையிலை அடிச்ச மாதிரி அவர் அடிச்சிட்டார்! அவர் 'பைலட்' மட்டுமல்ல நல்ல போலரும் போலை!

எங்கடை பிரச்சினை இப்ப ஒரு கிரிக்கெட் விளையாட்டும் ரெனிஸ் விளையாட்டுமாய்ப் போச்சுது இலங்கை அரசாங்கமும் இந்தியாவும் மாறி மாறி பந்தை அடுத்தவர் பக்கத்திலை போட்டுக் கொண்டிருக்கினம். நாங்கள் அழுது வடிந்து கொண்டிருக்க வேண்டி இருக்கு!

நாகரீகத்தின் தொட்டில் தென் இந்தியா எண்டும் அங்கிருந்து வந்தவர்கள் தான் ஈழத் தமிழர் எண்டும் சரித்திரம் சொல்லுது. ஆனால் நாங்கள் தரித்திரம் பிடித்தவர்களாக எல்லோ மாறி விட்டோம்.

எண்டு அகலும் இந்தத் தரித்திரக் கோலம்.?




## பரத நடனப் பயிற்சி இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை நடத்தும் பரதநடனப் பயிற்சி வகுப்பு இன்று (புதன்கிழமை) காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அங்குரார்ப்பணஞ் செய்யப்படும்.

யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் வகுப்பை அங்குரார்ப்பணஞ் செய்து வைப்பார்.

கலாசாரப் பேரவைத் தலைவரும் உதவி அரச அதிபருமான திரு. எஸ். பி பாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இப்பயிற்சிக்கு 25 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். (உ-எ)

## குடாநாட்டில்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறை – யாழ்ப்பாணம்-புன்னாலைக்கட்டுவன் – யாழ்ப்பாணம், கேரதீவு-யாழ்ப்பாணம், மாதகல் -யாழ்ப்பாணம் ஆகிய பாதைகளுடாகவே இந்த சேவைகள் நடைபெறுகின்றன.

காலையும், மாலையும் மட்டுமே இச்சேவை நடைபெறும். (உ-10)

## காவலூரில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர் காரைநகர் கடற்படை முகாமில் இருந்தும், பிரங்கிப்படகில் இருந்தும் ஊர்காவற்றுறைப்பகுதியை நோக்கி மோட்டோ ஷெல் தாக்குதல்களும், ஆட்லறி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக ஊர்காவற்றுறை கடற்கரை பகுதியை அண்டிவாழும் மக்கள் வேறிடங்களுக்கு நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. (உ-10)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 18 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீடு திகதி 21 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 18 Second Lane, Power house Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86 தொலைபேசி. 24805, 23075

சிப்பாய்கள் கெடுபிடி:

# குடாநாட்டு விவசாயிகளுக்கு பெருநஷ்டம்

யாழ்ப்பாணம், ஜன.21

ஆனையிறவு இராணுவ முகாம் சிப்பாய்களின் கெடுபிடிகள் காரணமாக உள்ளூர் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாமல் திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதனால் விவசாயிகளுக்குப் பெரு நஷ்டம் உண்டாகி உள்ளது.

எரிபொருள் தடையால் விவசாயிகள் நஷ்டத்தை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

தற்போது வெங்காய அறுவடை தொடங்கியிருக்கிறது.

அறுவடையாகும் பெரும் தொகையான வெங்காயத்தை வெளியூருக்கு அனுப்பிசந்தைப் படுத்துவது சிப்பாய்களின் கெடுபிடியினால் முடியாத காரியமாகியிருக்கிறது.

பல்லாயிரம் ரூபா பெறுமதியான வெங்காயத்துடன் பல லொறிகள் ஆனையிறவு தடைமுகாமை கடப்பதற்காக அப்பகுதியில் "தவம் கிடக்கின்றன."

இந்த லொறிகளில் பொதிகளாக-நெருக்கமாக – அடுக்கப்பட்டிருக்கும் வெங்காயம் அழுகும் நிலையில் இருக்கின்றது.

இதனால் ஆனையிறவில் "தவம் கிடந்த" லொறிகள் சில அங்கிருந்து திரும்பியிருக்கின்றன.

தங்கள் உற்பத்திச் செலவைக்கூட பெறமுடியாமல் பெருநஷ்டம் ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் உதயனுக்குத் தெரிவித்தனர். (உ-10)

## ஏனைய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுவருகின்றது

இப்படியான பிரசாரத்தில் ஈடுபடுபவர்கள் எமது கடுமையான தண்டனைக்குள்ளாக நேரிடும் என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது அதிர்ஷ்டலாபச் சீட்டும் மற்றைய நாளாந்த நிதி சேகரிப்புக்களும் வழமை போல் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

-இப்படி தமிழ் ஈழ இராணுவம் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளது. (உ-எ)

## லொறிக்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல லொறிகள் மீதும் பூரண சோதனை நடத்துமாறு நாம்கடும் உத்தரவு விடுத்திருக்கிறோம்

-இப்படி ஒரு லொறியைச் சோதனையிடுவதில் மூன்று நான்கு மணித்தியாலங்கள் வீணாகின்றன.

இதன் காரணமாகத் தான் லொறிகள் தொடர்ந்து போக்குவரத்து நடத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன

எனவே எம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது.

-இப்படி அவர் தெரிவித்தாக வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (உ-10)

## இந்தியா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணுவது என்பது முடியாதது.

ஸ்திரமற்ற நிலை

இலங்கை அரசின் நிலை ஸ்திரமற்றது.

டிசம்பர் 19 இல் திரு. ஜெயவர்த்தனா பிரச்சினைக்குத் தீர்வாக சில புதிய யோசனைகளை இந்தியக் குழுவிடம் கொடுத்து அனுப்பி இருந்தார்.

இரண்டு நாள் கழித்து புதிய யோசனைகள் குறித்து பிரச்சினைகள் தோன்றி இருப்பதாக இந்திய அரசுக்கு அறிவித்தார்.

இப்படியாக இலங்கை அரசு தனது உறுதிமொழியைக் காப்பாற்றுவதில் தவறிவிட்டது

உறுதியான யோசனைகள் இலங்கை அரசிடம் இருந்து வராதவரை இந்திய அரசினால் ஒன்றும் செய்யமுடியாது-

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார். (உ-எ)

## வெங்கடேஸ்.........

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரி ஓய்வு பெற்றுச் செல்ல அவரின் இடத்துக்கு திரு. வெங்கடேஸ்வரன் வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சீனா, ஐ நா.. சிரியா ஆகிய நாடுகளிலும் இந்தியத் தூதராக திரு. வெங்கடேஸ்வரன் பணியாற்றினார்.

திரு. வெங்கடேஸ்வரன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்

அவர் பதவியில் இருந்து ஓய்வு பெற இன்னும் பதினெட்டு மாதங்கள் இருந்தன. (உ-எ)

## யாழ்தபால்...

தது.

இதனால் கோட்டைப் பகுதி எங்கும் ஒரே புகை மண்டலமாக காட்சி அளித்தது.

இதேவேளை கோட்டை முகாமைச் சுற்றியுள்ள வீதிகளில் உள்ள பல மதகுகளின் மீதும் நேற்று டயர்கள் போட்டு கொளுத்தப் பட்டன.

யாழ் கோட்டைப் பக்கமாக திடீரென கிளம்பிய பெரும் புகை காரணமாக நகரில்உள்ள மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டது.

எனினும் உண்மை நிலை தெரியவந்ததை யடுத்து நகர் வழமைக்குத் திரும்பியது.

தீயின் காரணமாக மேற்படி கட்டடங்கள் வலுவிழந்து விட்டதாகவும் அவை தொடர்ந்து எதற்கும் பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்டடங்களுக்குப் போராளிகளே தீ வைத்ததாகத் தெரியவருகிறது. (உ-10)

## கிளிநொச்சி..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இவர்களின் பிரச்சினைகளை கேட்டறியுமாறு அறிவித்தார்.

இதன் பிரகாரமேவட பிராந்தியலொறிப் போக்குவரத்துச் சங்கத்தினர் இன்று கிளிநொச்சி இராணுவ உயர திகாரிகளை சந்திக்கச் செல்கின்றனர். (உ-10)

## ஆக்கிரமிக்கும்....

கும் குறைவாக இருப்பதனால் சிப்பாய்களுடனான மோதல் போதலில் ஈடுபட வேண்டிய [illegible]

-இப்படி திரு. கிட்டு தெரிவித்தார். (உ-10)

## வட்டமிட்ட ஹெலி!

யாழ்ப்பாணம், ஜன 21

யாழ் பெரிய தபாற் கந்தோரும், வீரசிங்கம் மண்டபமும் நேற்று எரிந்து கொண்டிருந்த பொழுது ஹெலிக்கொப்டர் ஒன்று அப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டது

இதே வேளைகோட்டை முகாமில் இருந்தும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன

பின்னர் மாலை 5மணி அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்றும் சி பிளேன் ஒன்றும் இப் பகுதியை வட்டமிட்டு பறந்து திரிந்தன. (உ-10)

அரசியல் சட்ட எரிப்பு வழக்கு:

## கருணாநிதி சார்பாக நீதிமன்றில் விடியோ படம்

சென்னை, ஜன. 20

இந்திய அரசமைப்புச் சட்டத்தை எரித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் தி மு க. தலைவர் கருணாநிதி சார்பாக விடியோ படம் ஒன்றைத் தாக்கல்செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது.

இவ்வழக்கு சைதாப்பேட்டை நீதிவான் பி. முத்துசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரசமைப்புச் சட்டத்தை எரித்ததாகக் கூறப்படும் தினத்தில் எடுக்கப்பட்ட விடியோ படத்தை நீதிமன்றத்தில் திரை இட்டுக் காட்டத் தாம் தயாராக இருப்பதாக கருணாநிதியின் வழக்கறிஞர் என். நடராஜன் தெரிவித்தார்.

"விடியோ படத்தை தஸ்தாவேஜாகச் சமர்ப்பிக்கலாம். ஆனால் அதைச் சாட்சியமாக ஏற்கலாமா?" என்பது பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும்"– என்று நீதிவான் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

10 எம். எல். ஏ க்கள் பதவி நீக்கம்

## ஆட்சேப மனுவை நீதிமன்றம் ஏற்றது

சென்னை, ஜன 20

தி.மு.க வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பத்துப்பேரை பதவி நீக்கஞ் செய்ததை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனுவை விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

அதைத் தொடர்ந்து தேர்தல்ஆணையாளருக்கு அழைப்பாணை அனுப்பும்படி உயர் நீதிமன்றம் உத்தரவு இட்டது.

ரிட் மனுவை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் முதலில் மறுத்து இருந்தது

இதனிடையில் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி விடுத்த அழைப்பை சபாநாயகர் பி எச் பாண்டியனும் சட்டசபைச்செயலாளரும்ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர்.

சட்டசபை தீர்மானத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று காரணம் கூறி உயர் நீதிமன்ற அழைப்பாணையை ஏற்க இருவரும் மறுப்புத்தெரிவித்தனர். (உ-எ)

## கருணாநிதியின் மகன் விடுதலை

சென்னை, ஜன, 20

தி. மு க தலைவர் திரு. மு கருணாநிதியின் மகன் திரு ஸ்டாலின் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றிய போது இவர் கைது செய்யப்பட்டார்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் எம். கே. அழகிரி,நீலநாராயணன் ஆகியோரும்இருந்தனர். (உ-எ)

5 ஆம் ஆண்டு தமிழ்

## புத்தகத்தை மீளப்பெற்று கொழும்புக்கு அனுப்ப கல்விப் பகுதிக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட 5 ஆம் ஆண்டு தமிழ் புத்தகத்தை மாணவர்களிடமிருந்து உடன் திரும்பிப்பெற்றுகொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு மாறாக நபிகள் நாயகத்தின் படத்தை இப்புத்தகத்தில் பிரசுரித்திருப்பதால் அதனை முற்றாக வாபஸ் பெறுவது என கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பது தெரிந்ததே.

மேற்படி புத்தகங்களை மாணவர்களுக்கு விநியோகித்த அதிபர்கள் அவற்றைத் திருப்பப் பெற்று வட்டாரக்கல்வி அதிகாரிக்கு அவர்களுடைய அலுவலகத்தில் ஒப்படைக்கும்படிகோரப் பட்டிருக்கிறது. (உ)

## ஆஸ்பத்திரி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தே உதிரிப்பாகங்கள் கொண்டுவரப்பட வேண்டியிருக்கும் எனவும் மின்சார சபை ஊழியர்கள் தெரிவித்திருந்தனர்.

கொழும்பிலும் மேற்படி'லிப்ட்'டுக்குரிய உதிரிப்பாகம் இல்லை எனக் கை விரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இந்த இழுபறியினையடுத்தே காங்கேசன் துறை பொறியியலாளர்கள் 'லிப்ட்' திருத்தும் முயற்சியில் இறங்கினர்.

அவர்களின் இச்சேவையைப் பாராட்டிய யாழ். போதனா வைத்தியசாலை [illegible] நசிகுமார் [illegible] நன்றியையும் தெரிவித்துள்ளார். (உ-10)

## ஆயுள் கைதி டாக்டரானர்

மதுரை, ஜன 20

மதுரை சிறையில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் ஒருவர் எம். பி. பி. எஸ் பரீட்சையில் சித்தி எய்தினார்.

தற்சமயம் 'ஹவுஸ் சார்ஜன்' ஆகப் பணியாற்றி வருகின்றார் இவர்

மத்திய சிறை சுப்ரீண்டன் திரு. எம். பகவதி முருகன் மதுரை செய்தியாளர் கழகக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார் (உ-எ)

இனப் பிரச்சினை:

# தீர்வு கிடைக்கும்போது மலையகத் தமிழருக்கும் பலன் கிடைக்கும் என்கிறார் சிதம்பரம்

சென்னை, ஜன 20

வடக்கு, கிழக்குத் தமிழருக்கு அரசமைப்பு ரீதியாக தீர்வு காணப்படும் போது, அது மலையகத் தமிழருக்கும் பயனளிப்பதாக இருக்கும்.

இந்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் சென்னையில் செய்தியாளர் மத்தியில் இப்படித் தெரிவித்தார்.

மலைநாட்டுத் தமிழர் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. சிதம்பரம் முன்கண்டவாறு சொன்னார்.

திரு சிதம்பரம் மேலும் சொன்னதாவது;

தற்சமயம் வடக்கு, கிழக்குத் தமிழர் பற்றிய பிரச்சினைகளையே நாம் கவனிக்கின்றோம் ஆனால் எல்லா விஷயங்களையும் உள்ளடக்கிய அரசமைப்பு ஒன்று உருவாகுமானால் அது மலையகத் தமிழருக்கு பலனளிப்பதாக இருக்கும்

மலைநாட்டுத் தமிழர் விஷயத்தில் அக்கறையுள்ள சில விடயங்கள் பொதுவானவையாக உள்ளன.

சில விடயங்கள் சிறப்பம்சங்கள் கொண்டவை – இப்படி அவர் கூறினார்.

'தமிழருக்கு ஆதரவு தெரிவிப்பதற்குப் பதில் நிர்ப்பந்தம் செலுத்துவதில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளதாக சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றனவே!' – இப்படி செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

திரு. சிதம்பரம் பதிலளிக்கையில் 'இது சரியானது அல்ல எமது ஆதரவு தமிழருக்கே என்று தெளிவாகத் தெரிவித்து விட்டோம்' என்றார். (உ-எ)

## ராஜீவின் செயலுக்கு பத்திரிகைகள் கண்டனம்

புதுடில்லி, ஜன 20

சிரேஷ்ட அரசு அதிகாரிகளை கண்ணியக் குறைவாக பிரதமர் காந்தி நடத்துவதாக 'டைம்ஸ் ஒப் இண்டியா' ஆங்கில நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் கண்டித்துள்ளது.

மத்திய விவசாய அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டார். ஆந்திர மாநில அரசின்கீழ் பணிபுரியும்படி அவர் அனுப்பப்பட்டார்.

இதுபோன்று கிராம வளர்ச்சி அமைச்சு அதிகாரி ஒருவரும் இடமாற்றஞ் செய்யப்பட்டார்.

சிரேஷ்ட அரச அதிகாரிகளை கண்ணியக் குறைவாக பிரதமர் காந்தி நடத்துகிறார். இது நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல

இப்படி 'டைம்ஸ் ஒப் இண்டியா' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்தது. (உ-எ)

## சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஜன.21

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியை அண்டிய பகுதியில் வைத்து சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த பதினெட்டாம் திகதி சனிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது. (உ-10)

## சினிமாவில் நடிக்க ஆந்திர முதல்வர் என். ரி. ராமராவ் முடிவு

ஹைதராபாத், ஜன. 20

ஆந்திர முதலமைச்சர் என். ரி. ராமராவ் 'பிரம்மரிஷி விஸ்வாமித்ரா' என்ற படத்தில் நடிக்க இருக்கிறார்.

தெலுங்குதேசம் கட்சி உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கும் 'நாதேசம்' என்ற பெயரில் தினசரி பத்திரிகை நடத்துவதற்கும் நிதி சேகரிப்பதற்காகவே திரு ராமராவ் இப்படத்தில் நடிக்கிறார்.

இப் படத்தில் விஸ்வாமித்திரராக திரு ராமராவ் நடிப்பார்.

'காயத்ரி மந்திரத்தை உலகுக்குத் தந்தவர் விசுவாமித்திரர். இராமபிரானின் குருவும் அவரே.

விசுவாமித்திரர் சகுந்தலையின் பாதுகாவலராகவும் இருந்தவர். பரதன் சகுந்தலையின் புதல்வன். பரதன்தான் இந்தியாவின் முதல் மன்னன். அதனால் தான் இந்தியாவுக்கு பாரத் என்ற பெயர் வந்தது" –இப்படி திரு. ராமராவ் சொன்னார்.

இதனிடையில் 14ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட "கிருஷ்ண சத்ய" என்ற திரைப் படத்தை திரு. ராமராவ் மீண்டும் வெளியிட இருக்கிறார்.

பஞ்சாயத்துச் சபைத் தேர்தலை ஒட்டி இப் படம் வெளியிடப்படவுள்ளது

படத்தின் கதாநாயகி ஜெயலலிதா (உ-எ)

## இராஜினாமா..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

யில் –

"பாகிஸ்தான் விஜயம் குறித்து திட்டம் எதுவும் நிச்சயிக்கப்படவேயில்லை"– என்று கூறி திரு. வெங்கடேஸ்வரனின் அறிவிப்பை பகிரங்கமாக மறுத்தார்.

புதிய வெளியுறவுச் செயலாளர் ஒருவரை நியமிக்கப்போவதாகவும் பிரதமர் காந்தி அப்போது அறிவித்தார்

அப்படி அவர் கூறிய மறுகணம், பிரதமர் காந்தி முன்னால் இருந்த மேசை மீது திரு வெங்கடேஸ்வரன்தனது ராஜினாமாக்கடிதத்தை வைத்தார்.

பிரதமரின் செய்தியாளர் மாநாட்டில் திரு வெங்கடேஸ்வரன் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர் (உ-எ)

## தொலைத் தொடர்பு 'அவுட்'

யாழ்ப்பாணம், ஜன.21

வெளியூர்களுக்கான தொலைபேசிச் சேவைகள் நேற்றுப் பிற்பகலில் திடீரென ஸ்தம்பித்தன.

தொலைபேசிச் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்ததற்கான காரணம் எதுவும் சரியாக ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை.

## வீடு தேசிய சொத்தானது

கல்கத்தா, ஜன.21

சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த வீட்டைத் தேசியச் சொத்தாக்க மேற்கு வங்காள அரசு தீர்மானித்துள்ளது

கல்கத்தா நகரின் வடபகுதியில் கௌர் மோஹன் முகார்ஜி வீதியில் இவ்வீடு அமைந்துள்ளது.

இவ்வீட்டைச் சுவீகரித்து விவேகானந்தர் கலாசார நிலையம் ஒன்றை நிறுவும்படி வேலூர் இராமகிருஷ்ண மிஷன் ஆசிரமநிர்வாகம் வேண்டுகோள் விடுத்து இருந்தது.

சுவாமி விவேகானந்தரின் 125ஆவது பிறந்த தினம் நாளை 22ஆம் திகதியாகும். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org